**இலங்கை பொலிஸ்**

**பயிலுநர் உப பொலிஸ் பரிசோதகர்**

**அடிப்படைத் தகைமைகள்**

- ❖ **வயதெல்லை**

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணபப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18-26 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் ஏற்கனவே இலங்கை பொலிஸ் சேவையில் இணைந்து கடமையாற்றும் உத்தியோகத்தர்களின், விண்ணப்ப படிவம் ஏற்றக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 28 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

- ❖ **கல்வித் தகைமைகள்**

க.பொ.த (சா/த) பரீட்சையில் தாய் மொழி மற்றும் கணிதப் பாடம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியெய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்,

க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களையும் சித்தியெய்திருத்தல் வேண்டும். (சாதாரணப் பரீட்சையைத் தவிர)

குறிப்பு 01 **இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின் படி பாட எண் 41,44 விஞ்ஞானப் பாடங்கள் ஒரு பாடமாகவும் , பாட எண் 42,45 கணிதப் பாடங்கள் ஒரு பாடமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களின் எண்ணிக்கை தீர்மாணிக்கப்படும்.**

குறிப்பு 02 **க.பொ.த (சா/த) பரீட்சையில் தொழிநுட்பப் பாடத்தில் எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தாது அப் பாடத்தில் செயன்முறைப் பரீட்சையில் சித்தியெய்திருப்பின், அப் பாடத்தில் சித்தியடையவில்லை என்றே கருதப்படும்.**

குறிப்பு 03 **விருப்பத்துக்குறிய தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள், க.பொ.த (சா/த) பரீட்சைப் பாடத்திட்டத்தில் உள்ளடங்குவதில்லை என்பதால், அப் பாடங்களில் சித்தியடைந்திருந்தாலும் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்ததாக கருதப்படமாட்டாது.**

- ❖ **உடற்த் தகைமைகள்**

- உயரம் 05 அடி 06 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். (செ.மீ 167.64)
- மார்பளவு 32 அங்குலம் அல்லது அதற்கு மேற்பட்டிருத்தல் வேண்டும். (செ.மீ 81.28) மூச்சு விடும் போது.